தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு
(2016–2018)

(பதினைந்தாவது பேரவை)

ஏழாவது அறிக்கை

"பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து/ மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள்"

(பேரவைக்கு அளிக்கப் பெற்ற நாள் : 5.7.2018)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்
சென்னை – 600 009.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு
(2016–2018)

(பதினைந்தாவது பேரவை)

ஏழாவது அறிக்கை

"பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து/மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள்" (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை) குறித்த மதிப்பீடு தொடர்பான குழுவின் அறிக்கை

பொருளடக்கம்

			பக்கம்
மதிப்பீட்டுக் குழுவின் அமைப்பு		...	i
முன்னுரை		...	iii

பாகம் – 1 அறிக்கை

	முகவுரை	...	1
I.	நிருவாக அமைப்பு	...	1
II.	ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சொந்த கட்டடம் கட்டுதல்	...	1–2
III.	போரூர், செம்மஞ்சேரி மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் அனைத்து வசதிகள் ஏற்படுத்துதல்	...	2–3
IV.	Times of India பத்திரிக்கை நிறுவனத்தின் சார்பில் கட்டப்பட்ட மருத்துவமனையை அரசே ஏற்று நடத்துதல்	...	3
V.	தாம்பரத்தில் செயல்படும் பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவமனையை அரசு ஏற்று நடத்துதல்	...	3–4
VI.	தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களை மருத்துவமனையாக தரம் உயர்த்துதல்	...	4
VII.	தேசிய ஊரக நலத் திட்டத்தின் கீழ் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல் சிகிச்சை பிரிவு துவங்குதல்	...	4
VIII.	திண்டுக்கல்லில் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை துவங்குதல்	...	5
IX.	ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச் சுவர் அமைத்தல்	...	5–6
X.	ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்புதல்		6–7
XI.	திருத்தணி திருக்கோவில் சார்பாக மருத்துவக் கல்லூரி அமைத்தல்	...	7
XII.	மருத்துவர்களுக்கு விபத்து மற்றும் அவசர சிகிச்சை குறித்து பயிற்சி	...	8
XIII.	உணவு கலப்படம் குறித்து புகார் தெரிவித்தல்	...	8–9
XIV.	'104' மருத்துவ தகவல் சேவை'	...	9
XV.	ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வரும் கர்ப்பிணிப் பெண்களுக்கு இருக்கை வசதி ஏற்படுத்துதல்.		10

XVI.	திண்டுக்கல் மாவட்ட தலைமை மருத்துவமனையில் தலைக்காய சிகிச்சைப் பிரிவு தொடங்குதல்	...	10–11
XVII.	வட்டம் சார்ந்த அரசு மருத்துவமனைகளின் சி.டி. ஸ்கேன் வசதி ஏற்படுத்துதல்	...	11
XVIII.	பொதட்டூர்பேட்டை வட்டம் சாரா அரசு மருத்துவமனையை மேம்படுத்துதல்	...	11–12
XIX.	2017–2018–ஆம் ஆண்டில் தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தின் கீழ் துறையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை	...	13

பாகம் – 2

நிகழ்ச்சிப் பகுதி	...	14–31
பரிந்துரைகளின் சுருக்கம்	...	32–34
குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம்		35

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மதிப்பீட்டுக் குழுவின் அமைப்பு (2016–2018)

(2017–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 1–ஆம் நாளன்று அமைக்கப்பெற்றது)
(2018 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31–ஆம் நாள்வரை நீட்டிக்கப்பட்டது)

தலைவர்

1. திரு. பி.எம். நரசிம்மன்

உறுப்பினர்கள்

#2. மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்
துணை முதலமைச்சர் (அலுவல் காரணமாக)

3. திரு. கரி. இராமசாமி
தலைவர், பொதுக் கணக்குக் குழு (அலுவல் காரணமாக)

@4. திரு. விருகை V.N. ரவி
தலைவர், பொது நிறுவனங்கள் குழு (அலுவல் காரணமாக)

5. திரு. எஸ்.ஆர். இராஜா
6. திரு. ஆர். கனகராஜ்
7. திரு. இரா. குமரகுரு
8. திரு. அர. சக்கரபாணி
9. திரு. கே.பி.பி. சாமி
10. திரு. எஸ். சுதர்சனம்
11. திரு. S. செல்வமோகன்தாஸ் பாண்டியன்
12. திரு. தங்கம் தென்னரசு
13. திரு. ஏ.பி. நந்தகுமார்
14. டாக்டர் V.P.B. பரமசிவம்
15. திரு. கே.பி.பி. பாஸ்கர்
16. திருமதி ப. மனோன்மணி
17. திரு. வி.வி. ராஜன் செல்லப்பா
18. திரு. செ. ராஜேஷ் குமார்

**19. ..... வெற்றிடம்

செயலகம்

திரு. கி. சீனிவாசன் . . செயலாளர்

திரு. க.லோ. சிவகுமரன் . . துணைச் செயலாளர்

திரு. கு. பாலகிருஷ்ணன் . . குழு அலுவலர் (பொ.க.கு)

 # 21.8.2017 முதல்
@ 19.3.2018 முதல்
*** 18.9.2017 முதல்*

முன்னுரை

2016–2018–ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு 1.2.2017–ஆம் நாளன்று அமைக்கப்பெற்றது. இக்குழுவில் 16 உறுப்பினர்கள் உள்ளனர். இது தவிர மாண்புமிகு துணை முதலமைச்சர், பொதுக் கணக்குக் குழுத் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுத் தலைவர் ஆகியோர் அலுவல் காரணமாக இக்குழுவில் உறுப்பினர்களாக உள்ளனர்.

2016–2018–ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு, தனது ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட ஐந்து மதிப்பீடுகளில், **"பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து / மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள்"** பற்றிய மதிப்பீடும் ஒன்றாகும். முந்தைய மதிப்பீட்டுக் குழுக்களின் அறிக்கைகளில் உள்ள பரிந்துரைகளின் மீது துறையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையினை நேரில் ஆய்வு செய்வதற்கும், நிதித் துறையின் கருத்துருவான திட்டம் மற்றும் திட்டம் சாரா வகைப்பாட்டினை ஒன்றிணைப்பது குறித்து குழுவின் பின்ஏற்பு ஒப்புதல் பெறுவதற்காகவும், 2016–2017 ஆம் ஆண்டு மதிப்பீட்டுக் குழு தனது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டிய மதிப்பீடுகள் குறித்து முடிவு செய்யவும் நீலகிரி மாவட்டத்தில் குழு கூடியது. அதன்தொடர்ச்சியாக **"பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து / மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள்"** குறித்த மதிப்பீட்டை கூர்ந்தாய்வு செய்வதற்காக குழு, தேனி, திண்டுக்கல், தூத்துக்குடி, திருநெல்வேலி, திருவள்ளூர், காஞ்சிபுரம், விருதுநகர் மற்றும் மதுரை ஆகிய 9 மாவட்டங்களில் ஆய்வுப் பயணம் மேற்கொண்டு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறையின் மாவட்ட அளவிலான அலுவலர்களுடன் கலந்துரையாடியது. 2.7.2018 அன்று சென்னையில், **மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின்** அரசு முதன்மைச் செயலாளர் அவர்கள் மற்றும் இதர துறை அலுவலர்களுடன் குழுவின் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இவ்வறிக்கைக்கு 4.7.2018 அன்று குழு ஒப்புதல் அளித்தது. **"பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து / மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள்"** குறித்த குழுவின் அறிக்கை பின்வரும் பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளது.

குழுவின் சார்பாக அறிக்கையை சட்டமன்றப் பேரவைக்கு வழங்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுக் குழுவின் தலைவராகிய நான், **"பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து / மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள்"** குறித்த இந்த அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

"பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து / மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள்" தொடர்பான மதிப்பீட்டினை ஆய்வு செய்வதற்குத் தேவையான அனைத்து தகவல்களையும் அளித்த **மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை** அலுவலர்களுக்கு குழு தனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறது. பார்வையிடுவதற்கு வசதியாக குழுவின் பரிந்துரைகள் பெரிய எழுத்துக்களில் **(Bold)** அச்சிடப்பட்டுள்ளன. இவ்வறிக்கையுடன் பரிந்துரைகளின் சுருக்கம் ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது.

சென்னை – 600 009,
நாள்: 4.7.2018,
ஆனி 20,
திருவள்ளுவர் ஆண்டு, 2049.

பி.எம். நரசிம்மன்,
தலைவர்,
மதிப்பீட்டுக் குழு.

பாகம்–1 அறிக்கை

பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்து/மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் குறித்த அறிக்கை

முகவுரை

தமிழ்நாட்டின் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்ககம் 1923–ஆம் ஆண்டில் துவங்கப்பட்டது. அவ்வியக்ககம் தடுப்பூசி, சுகாதாரக் கல்வி, தூய்மை மற்றும் துப்புரவுப் பணிகளை மேற்கொள்கிறது. மேலும், சுற்றுப்புறச் சூழல் சீர்க்கேடுகள், குடிநீர் மற்றும் சுற்றுச் சூழல் மாசு தீங்கினை கண்காணித்தல் போன்ற நடவடிக்கைகளால், மக்கள் பாதுகாப்பான மற்றும் மேம்பட்ட சுகாதாரத்துடன் வாழ வழிவகை செய்து வருகிறது. இதன் தொடர் நடவடிக்கையாக மாநிலத்தின் நோய் பாதிப்புகள், உயிரிழப்புகள் மற்றும் உடற்குறைபாடுகளை குறைத்திட நடவடிக்கை மேற்கொள்கிறது. அது மட்டும் அல்லாமல் சமுதாயம் சார்ந்த தாய்சேய் நலப்பணிகளை வழங்குதல், குடும்ப நலப்பணிகள், தொற்று மற்றும் தொற்றா வகை நோய்களை தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல், ஆக்கப்பூர்வமான வாழ்க்கை முறையை உருவாக்குதல் போன்றவற்றை பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்து / மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் துறையின் வாயிலாக நகரம் மற்றும் ஊரக பகுதிகளில் அனைவருக்கும் வழங்குவதில், பொது சுகாதாரத் துறை கவனம் செலுத்துகிறது. மக்கள் வாழ்க்கை தரத்தை குறிப்பாக, பெண்கள் மற்றும் குழந்தைகளின் வாழ்க்கை தரத்தை வெளிப்படைத் தன்மையுடன் உயர்ந்த அளவிலான தகவல் தொழில்நுட்ப உத்திகளை பயன்படுத்தி உயர்தர பொது சுகாதார சேவைகள் அளிப்பதன் மூலம் உயர்த்துவது துறையின் நோக்கமாகும்.

I. நிர்வாக அமைப்பு

மாநில அளவில் பொது சுகாதாரத் துறை மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் அரசு முதன்மைச் செயலாளர், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர், கூடுதல் இயக்குநர் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் (மருத்துவம்)–(திட்டம் (ம) வளர்ச்சி)–(ஆய்வுக்குழு)–(நிர்வாகம்), மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இணை இயக்குநர் (மருத்துவம்), பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர், கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள் (திட்டங்கள்), நிதி ஆலோசகர் மற்றும் முதன்மை கணக்கு அலுவலர், பணியாளர் அலுவலர் மற்றும் இணை இயக்குநர் (நிதி (ம) மனிதவள மேலாண்மை (ம) நிர்வாகம்), துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் மற்றும் வட்டார மருத்துவ அலுவலர்கள் ஆகியோரின் கீழ் துறை செயல்படுகிறது.

II. ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சொந்த கட்டடம் கட்டுதல்

2. தமிழ்நாட்டில் வாடகை/வாடகையில்லா கட்டடங்களில் செயல்படும் 106 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சொந்த கட்டடம் கட்டும் பணிகள் குறித்து குழு அறிய விரும்பியது.

3. குழு கோரியதற்கு 106 ஆரம்ப சுகாதார நிலையங்களில் கட்டடப் பணிகளின் தற்போதைய நிலை பின்வருமாறு:–

(i) கட்டுமானப் பணிகள் நிறைவுற்று சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வரும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் –27, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வரும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் – 30,கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் – 26, தேசிய ஊரக நல நிதி உதவி கோரப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் – 2, நிலமாற்றம் மற்றும் மாற்று நிலம் தேர்வு செய்யப்பட்டு வரும் ஆரம்ப சுகாதார நிலையங்கள்–21. 54–ஆரம்ப சுகாதார நிலையங்களின் தற்போது 21 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு நில மாற்றம் மற்றும் மாற்று நிலம் தேர்வு செய்யப்பட்டு வருகிறது. கட்டுமானப் பணிகள் நடைபெற்று வரும் ஆரம்ப சுகாதார நிலையங்கள்–16, கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள்–15, தேசிய ஊரக நலநிதி உதவி கோரப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள்–2 என துறையால் தெரிவிக்கப்பட்டது.

4. பல்வேறு நிலைகளில் உள்ள பணிகளை துறை குறித்த காலத்திற்குள் முடிப்பதற்கு அனைத்து நடவடிக்கையினையும் மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

III. போரூர், செம்மஞ்சேரி மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களில் அனைத்து வசதிகள் ஏற்படுத்துதல்

5. போரூர், செம்மஞ்சேரி மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அனைத்து வசதிகளும் ஏற்படுத்துதல் குறித்து குழு அறிய விரும்பியது.

6. பெருநகர சென்னை மாநகராட்சியிடம் 01.04.2014 முதல் ஒப்படைக்கப்பட்ட போரூர் மற்றும் செம்மஞ்சேரி நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் 24 மணி நேரமும் செயல்படுகின்றன. மாநகராட்சியின் சொந்த கட்டடத்தில் செயல்படுகின்ற போரூர் (சின்னப்போரூர், ஜெய் கார்டன், சென்னை–116) ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூபாய் 670 இலட்சத்தில் அனைத்து நவீன வசதிகளுடன் கூடிய 100 படுக்கைகள் கொண்ட, 24 மணி நேரமும் செயல்படும் நகர சமுதாய நலவாழ்வு மையம் கட்டடத்திற்கான கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. செம்மஞ்சேரி நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் ஈஞ்சம்பாக்கத்தில் ரூபாய் 741 இலட்சத்தில் அனைத்து வசதிகளுடன் கூடிய 100 படுக்கைகள் கொண்ட, 24 மணி நேரமும் செயல்படும் நகர சமுதாய நலவாழ்வு மையம் கட்டடத்திற்கான கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இரத்த வகை கண்டறிதல் (குரூப்), ஹீமோகுளோபின், சிறுநீர் பரிசோதனை மற்றும் எச்.ஐ.வி. பரிசோதனை மற்றும் ஆலோசனை, நீரிழிவு நோய் மற்றும் கர்ப்ப கால இரத்த அழுத்த நோய் உள்ள கர்ப்பிணித் தாய்மார்களை கண்டறிதல் ஆகியவை அனைத்தும் மேம்படுத்தப்பட்ட ஆய்வுக் கூட உபகரணங்களைக் கொண்டு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் செயல்படுத்தப்படுகின்றன என்று துறையால் தெரிவிக்கப்பட்டது.

7. குழு, மேலும், போரூர் மற்றும் செம்மஞ்சேரி ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் குறித்து கோரிய கூடுதல் தகவல்களுக்கு துறையின் அரசு முதன்மைச் செயலாளர், போரூர் மற்றும் செம்மஞ்சேரி ஆகிய இரண்டு பகுதிகளும், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதியாகும். அங்கு பணிபுரியும் மருத்துவர்கள் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் செயல்படவில்லை என்றும், அந்த மருத்துவமனைகளின் கட்டுமானப் பணிகள் மூன்று மாதங்களில் நிறைவடையும் என்றும், குழுவிற்கு தெரிவித்தார்.

8. முன்பெல்லாம் சென்னை பெருநகர மாநகராட்சிக்கு மருத்துவர்கள் நியமனம் செய்யும் போது, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையில் இருந்து அயர்பணி அடிப்படையில் மருத்துவர்கள் அனுப்பி வைக்கப்படுவார்கள் என்றும், அப்போது மருத்துவர்கள் நேரடி நியமனம் வாயிலாக பெருநகர சென்னை மாநகராட்சியால் நியமிக்கப்படவில்லை. ஆனால், தற்போது தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் மூலம் மருத்துவர்களின் நியமனம் நடைபெறுகிறது. மேலும், சென்னை மாநகராட்சியின் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் மருத்துவர்களின் பற்றாக்குறை உள்ளது. தற்போது ஒப்பந்த அடிப்படையில் மருத்துவர்கள் நியமனம் நடைபெறுகிறது. மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியின் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் மருத்துவர்கள் போதுமான எண்ணிக்கையில் இல்லை என்றும் மருத்துவப் பணிகள் கழகத்தில் மூலம் மருத்துவர்களை நியமனம் செய்ய அரசுக்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டு நியமிக்கக் கோரியுள்ளோம். அதே நடைமுறை பெருநகர சென்னை மாநகராட்சியும் செயல்படுத்தினால், அதன் நிர்வாக கட்டுப்பாட்டில் உள்ள மருத்துவமனைகள் சிறப்பாக இருக்கும். மேலும், மருத்துவர்கள் பற்றாக்குறையும் இருக்காது. பெருநகர சென்னை மாநகராட்சியில் மருத்துவப் பணியாளர்கள் கழகத்தின் மூலம் மருத்துவர்களை நியமனம் செய்ய மதிப்பீட்டுக் குழு அரசுக்கு பரிந்துரை செய்தால், நன்றாக இருக்கும் என்றும் தெரிவித்தார்.

9. போரூர் மற்றும் செம்மஞ்சேரி நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் 100 படுக்கைகள் கொண்ட 24 மணிநேரமும் செயல்படும், நகர சமுதாய நலவாழ்வு மையத்திற்கு அயர்பணி முறையில் கூடுதலாக மருத்துவர்களை நியமிப்பதற்கு, குழு பரிந்துரை செய்கிறது.

IV. Times of India பத்திரிக்கை நிறுவனத்தின் சார்பில் கட்டப்பட்ட மருத்துவமனையை அரசே ஏற்று நடத்துதல்

10. குழு, சென்னை அருகில் Times of India பத்திரிக்கை நிர்வாகத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள அனைத்து வசதிகளுடன் கூடிய மருத்துவமனை ஒன்று செயல்படுகிறது என்றும், சிறப்பு நேர்வாக அம்மருத்துவமனையை அரசே எடுத்து நடத்த வேண்டுமென குழுவிடம் கோரிக்கை வைக்கப்பட்டது.

11. குழுவின் கோரிக்கைக்கு அரசு முதன்மைச் செயலாளர், குழு கோரிய அம்மருத்துவமனையை, நிர்வாக ரீதியான நடைமுறைகளுக்கு உட்பட்டு, அரசே எடுத்து நடத்துவதற்கு மருத்துவத் துறை தயாராக உள்ளது என்பதை குழுவிற்கு தெரிவித்தார்.

12. அரசு முதன்மைச் செயலாளர் தெரிவித்தது போல் மேற்படி மருத்துவமனையை விதிகளுக்குட்பட்டு அரசே ஏற்று நடத்த வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

V. தாம்பரத்தில் செயல்படும் பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவமனையை அரசு ஏற்று நடத்துதல்

13. குழு, தாம்பரத்தில் தற்போது பெருநகர சென்னை மாநகராட்சியால் நடத்தப்பட்டு வரும் மருத்துவமனை ஒன்று செயல்படுகிறது என்றும், அப்பகுதியில் 15,000–க்கும் மேற்பட்ட குடிசை மாற்று வாரிய வீடுகள் உள்ளன. அம்மருத்துவமனையை அரசே ஏற்று நடத்தும்பட்சத்தில் அப்பகுதி மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். எனவே, அம்மருத்துவமனையை அரசே ஏற்று நடத்த வேண்டும் என்று குழு சார்பாகத் தெரிவிக்கப்பட்டது.

14. குழு, துறையின் சார்பில் எத்தகையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை அரசு முதன்மைச் செயலாளர் அவர்கள் குழு முன் விளக்க வேண்டும் என்று கருத்து தெரிவித்தது.

15. குழு, கோரியதற்கு அரசு முதன்மைச் செயலாளர் குழு சார்பாக ஆக்கப்பூர்வமான பல கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சியில் 4 மருத்துவக் கல்லூரிகளும், 53 தாய்சேய் நல விடுதிகளும் மற்றும் மருந்தகங்களும் செயல்படுகின்றன. பெரியார் நகர் மற்றும் கே.கே. நகரில் புறநகர் மருத்துவமனைகள் செயல்படுகின்றன. செம்மஞ்சேரியில் எந்த ஒரு அரசு மருத்துவமனையும் இல்லை என்றும், அந்தப் பகுதியில் ஒரு தரமான புறநகர் மருத்துவமனையை உருவாக்க, துறையைப் பொருத்தவரை தயாராக உள்ளதாகவும், குழுவிற்கு தெரிவித்தார்கள்.

16. தாம்பரத்தில் செயல்படும் பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவமனையை அரசே ஏற்று நடத்த வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

VI. தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களை மருத்துவமனையாக தரம் உயர்த்துதல்

17. தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதாரம் குறித்து குழு அறிய விரும்பியது.

18. குழு, கோரியதற்கு 2017–2018–ஆம் ஆண்டு தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களின் அரசாணை எண்.257, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை நாள் 21.07.2017–இன்படி 15 ஆரம்ப சுகாதார நிலையங்களும் அரசாணை எண்.295, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை 22.08.2017–இன்படி 9 ஆரம்ப சுகாதார நிலையங்களும் மேம்படுத்தப்பட்டுள்ளன. 2018–2019–ஆம் ஆண்டு தரம் உயர்த்தப்பட்ட நிலையங்களின் துறையின் அரசாணை எண்.153–இன்படி மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை நாள் 25.4.2017–இன் படி 12 ஆரம்ப சுகாதார நிலையங்களும் மேம்படுத்தப்பட்டுள்ளதாக துறையால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

19. மேம்படுத்தப்பட்ட அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களில் மேம்படுத்தப்பட்டதற்கான அனைத்து வசதிகளையும், விரைந்து ஏற்படுத்தப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

VII. தேசிய ஊரக நலத் திட்டத்தின் கீழ் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல் சிகிச்சை பிரிவு துவங்குதல்

20. 55 ஆரம்ப சுகாதார நிலையங்களில் தேசிய ஊரக நலத் திட்டத்தின் கீழ் பல் மருத்துவப் பிரிவுகள் துவங்குவதற்கான கருத்துரு அனுப்பப்பட்டுள்ளதாகவும், அதற்கான அரசாணை எதிர்பார்க்கப்படுவதாகவும், துறையால் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் தற்போதைய நிலையை குழு அறிய விரும்புகிறது.

21. குழு கோரியதற்கு, தேசிய ஊரக நலத் திட்டத்தின் மூலமாக 55 ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல் சிகிச்சை பிரிவுகள் துவங்க அரசாணை எண்.191, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (இஎபி11–2) துறை, நாள் 19.05.2017 மூலம் ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும், அரசாணை நகல் அனைத்து துணை இயக்குநர் சுகாதாரப் பணிகளுக்கு அனுப்பப்பட்டு, பல் மருத்துவர்களை நியமிக்க, தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளதென துறையால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

22. துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள் பல் மருத்துவர்களை நியமிப்பதற்கு துரிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

VIII. திண்டுக்கல்லில் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை துவங்குதல்

23. திண்டுக்கல் மாவட்டத்தில் அரசின் சார்பாக மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கப்படவேண்டுமென்ற கோரிக்கை குழுவிடம் தெரிவிக்கப்பட்டது. திண்டுக்கல் மாவட்டத்தில் இருந்து விபத்து மற்றும் உயர் சிகிச்சைக்காக மதுரை, திருச்சி அல்லது கோயம்புத்தூருக்கு செல்ல வேண்டும் என்றால் இரண்டு அல்லது மூன்று மணி நேரங்கள் ஆகின்றன. இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் பதிலளிக்கையில் பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் அருகில் போதுமான இடமிருக்கிறது. அங்கே மருத்துவக் கல்லூரி அமைக்கப்படும் என்று உறுதியளித்தார். திருக்கோயிலின் நிதியில் 40 சதவீதம் செலவு போக 60 சதவீதம் நிதி இருக்கிறது. ஆகவே, அங்கே உயர் சிகிச்சை செய்வதற்கு ஏதுவாக, அரசு மருத்துவமனை ஆரம்பிப்பதற்கு குழு பரிந்துரை செய்ய வேண்டும் என்று குழுவிடம் கோரிக்கை வைக்கப்பட்டது.

24. குழு, திண்டுக்கல் மாவட்டம், பழநி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலின் அருகில் இந்து சமய அறநிலையத் துறைக்கு சொந்தமான இடமிருப்பதால், அங்கு அரசின் சார்பில் உயர் சிறப்பு சிகிச்சைப் பிரிவுகளை உள்ளடக்கிய மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அமைக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

25. அதே போல் ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவனையில் பொது அறுவை சிகிச்சை மருத்துவர் மயக்க மருத்துவர் மற்றும் குழந்தைகள் நல மருத்துவர் போன்ற பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. இப்பணியிடங்களை நிரப்பிட வேண்டுமென்றும், பழநி ஆரம்ப சுகாதார நிலையத்தில் போதிய மருத்துவப் பணியிடங்கள் நிரப்பப்படவேண்டும் என்றும், கீரனூர் மற்றும் கள்ளிமந்தையத்தில் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை உள்ளது. அதில், 5 மருத்துவர்கள் இருக்க வேண்டும். ஆனால், ஒரே ஒரு மருத்துவர் தான் பணிபுரிகிறார் என்று குழுவிடம் தகவல் தெரிவிக்கப்பட்டது.

26. பழநி, கீரனூர் மற்றும் கள்ளிமந்தையத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவர்களை நியமிக்கக் குழு பரிந்துரை செய்கிறது.

IX. ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச் சுவர் அமைத்தல்

27. குழு, திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள 52 ஆரம்ப சுகாதார நிலையங்களில், 15 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச் சுவர் உள்ளது. மீதம் உள்ள 37 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச் சுவர் கட்ட மற்றும் அடிப்படை வசதிகளை செய்ய பொதுப்பணித் துறையிடம் மதிப்பீட்டுப் பட்டியல் கோரப்பட்டுள்ளதென குழுவிடம் தெரிவிக்கப்பட்டது. அதன் தற்போதைய நிலை குறித்து, குழு அறிய விரும்புகிறது.

28. குழு கோரியதற்கு துறையின் அரசு முதன்மைச் செயலாளர் மொத்தம் 37 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச் சுவர் இல்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பணிகளை M & R Fund –லிருந்து தான் மேற்கொள்ள வேண்டும். 20 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான பணிகள் இந்தாண்டு முடிக்கப்படும். மீதமுள்ள 17 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான பணிகள் வரும் ஆண்டில் முடிக்கப்படும். மேலும், திருவாலாங்காட்டில் ரூ.1.3 கோடி செலவில் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை அமைக்க, அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளும் 45 நாட்களுக்குள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்தார்.

29. துறை தெரிவித்தது போல் குறித்த காலத்திற்கு முன் தேவையான அனைத்து நடவடிக்கையினையும் மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

X. ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்புதல்

30. குழு, திருவள்ளூர் மாவட்டம், மாதவரத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் 01.04.2017 அன்று தரம் உயர்த்தப்பட்டது. இருப்பினும், அங்கு மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் இதரப் பணியாளர்கள் பணியமர்த்தப்படவில்லை. புறநோயாளிகளுக்கு நுழைவுச் சீட்டு வழங்குவதற்கு கூட பணியாளர்கள் இல்லை. முன்பு தாலுக்கா மருத்துவமனையாக இருந்தபோது ஒரு மகப்பேறு மருத்துவர் பணியில் இருந்தார். இங்கே ஒவ்வொரு மாதமும், 40, 50 பிரசவங்கள் நடைபெறுகின்றன. அது மிகவும் பின்தங்கிய பகுதி, அதேபோல் மோரைப் பகுதி 50,000 மக்கள் வசிக்கக் கூடிய இடமாகும். அப்பகுதிக்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டும் என்று கோரினால், வெள்ளானூர் ஊராட்சி ஒன்றிய மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கிறார்கள். மோரைப் பகுதியில் சுகாதார நிலையம் அமைக்க மாவட்ட ஆட்சியர் அவர்கள் ஒப்புக் கொண்டுள்ளார்கள். சுகாதார நிலையம் அமைப்பதற்கு தேவையான அரசாங்க நிலமும் உள்ளது. எனவே, மோரைப் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டும் என்பது குழுவின் கருத்தாகும்.

31. குழு, விருதுநகர் மாவட்டத்தில் ஆய்வுப் பயணம் மேற்கொண்ட போது சாத்தூர் அரசு மருத்துவமனையில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட 10 மருத்துவர் பணியிடங்களில் 9 பணியிடங்கள் காலியாக உள்ளது என குழுவிடம் தகவல் தெரிவிக்கப்பட்டது. இப்பணியிடங்களை நிரப்புவதற்கு துறையால் எடுக்கப்பட்ட நடவடிக்கையினையும், அம்மருத்துவமனையில் மருத்துவ பணிகள் எவ்வாறு மேற்கொள்ளப்படுகிறது என குழு அறிய விரும்பியது.

32. மருத்துவமனைக்கு வருகை தரும் நோயாளிகள் நலன் கருதி மருத்துவமனையில் உள்ள மருத்துவர்களின் காலிப்பணியிடங்கள் நிரப்பிவேண்டும் என்பதே குழுவின் கருத்தாகும். சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு துறையால் தெரிவிக்கப்பட்டது போல் துரித நடவடிக்கையினை மேற்கொண்டு மருத்துவர்கள் காலிப்பணியிடங்கள் நிரப்பப்படவேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

33. குழு, மாவட்டங்களில் ஆய்வுப் பயணம் மேற்கொண்ட போது மருத்துவ அலுவலர்கள், மருந்தாளுனர்கள், கதிரியியக்க தொழில் நுட்பப் பணியாளர்கள், ஆய்வக தொழில் நுட்பத்தினர் போன்ற பணியிடங்கள் அதிக அளவில் நிரப்பப்படாமல் உள்ளதாக குழு அறிந்தது. இப்பணியிடங்களை நிரப்புவதற்கு துறையால் எடுக்கப்பட்ட நடவடிக்கையினை குழு அறிய விரும்பியது.

34. துறையால் அளிக்கப்பட்ட தகவலை பார்வையிடும்போது மருத்துவர், மருந்தாளுநர், நுண்கதிர் வீச்சாளர் மற்றும் ஆய்வக நுட்புநர் ஆகிய பதவிகளில் காலிப்பணியிடங்கள் இருப்பதாக குழு அறிகிறது. வெவ்வேறு நிலைகளில் உள்ள பணியிடங்கள் எப்போது முதல் காலியாக உள்ளது என்கிற விவரம் துறையால் தெரிவிக்கப்படவில்லை. ஒப்பளிப்பு செய்யப்பட்ட அனைத்து நுண்கதிர் வீச்சாளர் பணியிடங்களும் காலியாக உள்ளதால், நுண்கதிர் வீச்சு இயந்திரமும் செயல்படாமல் இருக்கும் என்றே குழு கருதுகிறது.

35. நுண்கதிர் வீச்சாளர் பதவியில் உள்ள காலிப்பணியிடங்களை ஒரு சிறப்பு நியமனம் (Special Drive) மூலம் நிரப்பத் துறை மருத்துவ பணிகள் தேர்வு வாரியத்தினை வலியுறுத்த வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

36. மாதவரத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மகப்பேறு மருத்துவர் காலிப்பணியிடத்தினை நிரப்பவும், மோரைப் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கவும் குழு பரிந்துரை செய்கிறது.

37. குழு, விருதுநகர் மாவட்டத்தில் ஆய்வுப் பயணம் மேற்கொண்டபோது விருதுநகர் அரசு தலைமை மருத்துவமனை சுற்றுச்சுவர் உயரத்தை அதிகப்படுத்த வேண்டும் என்றும் வடமலாபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுசுவர் மற்றும் Approach Road அமைத்துத் தர வேண்டும் என்றும் குழுவிடம் கோரிக்கை வைக்கப்பட்டது. இது குறித்து கருத்துரு ஏதேனும் துறையிடம் வரப்பெற்றுள்ளதா என குழு அறிய விரும்பியது.

38 குழு கோரியதற்கு, விருதுநகர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் சுற்றுச்சுவர் உயரத்தை அதிகப்படுத்துவதற்கான கருத்துரு விருதுநகர் பொதுப் பணித்துறை கட்டடம் (க(ம)பரா) கோட்டம் உதவி செயற்பொறியாளரிடமிருந்து திட்ட மதிப்பீடு பெறப்பட்டுள்ளது. அதுகுறித்து அரசிற்கு கருத்துரு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. விருதுநகர் மாவட்டம், சிவகாசி சுகாதார மாவட்டம், சிவகாசி ஊராட்சி ஒன்றியத்தில் வடமலாபுரம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. வடமலாபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுசுவர் மற்றும் அணுகு சாலை அமைத்து தர பொதுப் பணித்துறையிடம் மதிப்பீடு பட்டியல் கோரப்பட்டுள்ளது. மதிப்பீடு பட்டியல் பெறப்பட்டவுடன் வடமலாபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுசுவர் மற்றும் அணுகு சாலை அமைத்துத் தர நடவடிக்கை எடுக்கப்படும் என்று துறையால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

39 வடமலாபுரம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் அமைக்கப்பெற வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

XI. திருத்தணி திருக்கோவில் சார்பாக மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை அமைத்தல்

40. திருத்தணி அரசு மருத்துவமனை அமைப்பது குறித்து அறிவித்த அறிவிப்பில் 7 இடங்களுக்கு நிதி ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள். அதில் திருத்தணியும் ஒன்றாகும். அதற்கு குழுவின் சார்பாக பாராட்டுதலையும் நன்றியினையும் குழு தெரிவித்து கொள்கிறது. இந்த மருத்துவமனைக்கு ஆயிரக்கணக்கான நோயாளிகள் வருகிறார்கள். பக்கத்து மாநிலமான ஆந்திரா, கர்நாடகா மாநிலத்திலிருந்தும் வருகிறார்கள். அதனால் அங்கு குடிநீர் வசதி அவசியம் தேவைப்படுகிறது. அதற்கு துறைச் சார்பாக நல்ல திட்டம் கொண்டுவர வேண்டும். டயாலிசிஸ் சென்டர் வேண்டுமென்று கேட்கிறார்கள். ECO Machine வேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டது.

41. குழு, திருவள்ளூர் மாவட்டத்தில் ஆய்வுப் பயணம் மேற்கொண்ட போது திருத்தணி திருக்கோயில் சார்பாக மருத்துவக் கல்லூரி அமைக்கப்பெற வேண்டும் என்று குழுவிடம் கோரிக்கை வைக்கப்பட்டது.

42. திருவள்ளூர் மாவட்டத்தில், திருத்தணி திருக்கோயில் சார்பாக புதிய மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை அமைக்க குழு பரிந்துரை செய்கிறது.

XII. மருத்துவர்களுக்கு விபத்து மற்றும் அவசர சிகிச்சை குறித்து பயிற்சி

43. 12 வார கால அளவில் Emergency Medicine Module என்கிற ஒரு பயிற்சியை (Online) ஆன்லைன் மூலமாக அனைத்து அரசு மருத்துவர்களுக்கும் விபத்து மற்றும் அவசரச் சிகிச்சை குறித்து கட்டாயமாகப் பயிற்சியளிக்கப்பட வேண்டும் என்பதும், அப்பயிற்சி முடித்த மருத்துவர்களுக்கு ஊதிய உயர்வும் வழங்கலாம் என்பதும் குழுவின் கருத்து.

44. குழுவின் கருத்துக்கு துறையின் அரசு முதன்மைச் செயலாளர் இது ஒரு நல்ல ஆலோசனை என்றும், அவசர கால சிகிச்சையில் பாம்புக்கடி மற்றும் விபத்து சிகிச்சை போன்றவற்றில் அரசு மருத்துவர்களுக்கு Online முறையில் உரிய பயிற்சி வழங்குவதற்கு குழு பரிந்துரை செய்ய வேண்டும் என்றும் அவ்வாறு பரிந்துரை செய்யப்பட்டால், துறையின் வாயிலாக உரிய நடவடிக்கை எடுக்க ஏதுவாக இருக்கும் என்றும் தெரிவித்தார்.

45. மக்களின் உயிர் காக்கும் நோக்கில் அரசு மருத்துவர்கள் அனைவருக்கும் விபத்து மற்றும் அவசர சிகிச்சை குறித்த 12 வார கால Online அல்லது நேரடி பயிற்சி கட்டாயமாக வழங்க குழு பரிந்துரை செய்கிறது.

XIII. உணவு கலப்படம் குறித்து புகார் தெரிவித்தல்

46. தாம்பரம் சுற்றியுள்ள பகுதிகளில் அதாவது, நடைபாதை கடைகளில் விற்கப்படும் உணவுகள், ஏற்கனவே உபயோகித்த எண்ணெய்யை உபயோகிக்கிறார்கள் என்றும், அசைவ உணவுகளை தயாரிக்கும் போது இரயிலில் அடிபட்டு இறந்த ஆடு, மாடு போன்றவைகளும் உபயோகப்படுத்தப்படுகிறது. மக்கள் நடைபாதையில் விற்கும் உணவுப் பொருட்களை வாங்கி சாப்பிடுகிறார்கள். துறையின் மூலம் திடீர் ஆய்வு செய்து, உடன் நடவடிக்கை எடுத்து, எந்தெந்த கடைகளில் பொருட்கள் தரமானது இல்லை என்பதை கண்டறியப்பட்டால் கடைகளை நடத்தும் நபர்களுக்கு பயம் ஏற்படும். அவர்கள் நல்ல தரமான பொருட்களை விற்க முற்படுவர். இது குறித்து, உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குழு சார்பாக கருத்து தெரிவிக்கப்பட்டது.

47. குழு கோரியதற்கு ஆணையர், உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகம் பொதுமக்களிடமிருந்து அதிகமாக புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. புகார் வந்தவுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கலப்படம் செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் குறித்து, துறைக்கு வாட்ஸ்அப் மூலம் தொடர்புகொள்ள தொலைபேசி எண். 94440 42322 என்கிற தொலைபேசி எண் கொடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட புகார்கள் வந்துள்ளன. அதில் 75 சதவீதம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில் நெய்யில் கலப்படம், தாம்பரத்தில் எண்ணெயில் கலப்படம் என புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. புகார்கள் வந்த உடன், உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. இதுவரை, 1500 மாதிரிகள் வந்துள்ளன. 30 புகார்களுக்கு மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளன என்று துறையால் தெரிவிக்கப்பட்டதை குழு அறிந்தது.

48. உணவு கலப்படம் குறித்து புகார் செய்ய துறையால் தெரிவிக்கப்பட்டுள்ள தொலைபேசி எண்ணை பொது மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் உரிய விளம்பரம் செய்யப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

49. குழு, விருதுநகர் மாவட்டத்தில் ஆய்வுப் பயணம் மேற்கொண்ட போது சிவகாசி வடபட்டியில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படும் என்று எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவின் போது அறிவித்ததாக குழுவிற்கு துறை சார்பாக தகவல் தெரிவிக்கப்பட்டது. மேற்படி ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்காக துறையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து குழு அறிய விரும்பியது.

50. குழு, கோரியற்கு விருதுநகர் மாவட்டம் சிவகாசி சுகாதார மாவட்டம், சிவகாசி ஊராட்சி ஒன்றியம் வடபட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசாணை வேண்டி, அரசுக்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும், அரசாணை எதிர் பார்க்கப்படுவதாகவும் துறையால் தெரிவிக்கப்பட்டது.

51. பொது மக்களின் உடனடி சிகிச்சைக்கு (Initial Treatment) தீர்வாக துணைச் சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன என்பது குழுவின் கருத்து.

52. சொந்த கட்டடம் கட்டித் துறையால் நிர்ணயிக்கப்பட்டுள்ள எண்ணிக்கைக்கு உரிய நிதியினை பெற்று உடன் அது தொடர்பான நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

XIV. '104' மருத்துவ தகவல் சேவை'

53. 104 மருத்துவ தகவல் சேவையின் கீழ் 2017–2018 ஆம் ஆண்டில் பெறப்பட்ட மொத்த அழைப்புகள் குறித்த விவரத்தினை குழு அறிய விரும்பியது.

54. குழு கோரியதற்கு துறை ஏப்ரல் முதல் மார்ச் வரையிலான மொத்த அழைப்புகள் 5,81,097 என்று துறையால் தெரிவிக்கப்பட்டது.

55. 104 மருத்துவ தகவல் சேவை குறித்து பொது மக்களிடையே போதுமான விழிப்புணர்வு உள்ளதா என்று குழு கோரியதற்கு துறையின் அரசு முதன்மைச் செயலாளர் இச்சேவை நன்றாக பொதுமக்களிடம் சென்றடைந்துள்ளது. இன்சூரன்ஸ் நிதியைப் பயன்படுத்தி பிரபலமான திரைப்பட நடிகர்களை வைத்து விளம்பரம் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்கின்றோம். 104 என்ற தொலைபேசி எண்ணிற்கு போன் செய்தால் அவர்கள் என்ன பிரச்சினை என்று கேட்பார்கள். உதாரணமாக, திருப்போரூர் சென்று 104–க்கு போன் செய்து மருத்துவமனை அருகில் எங்கு உள்ளது என்று கேட்டால் அந்த இடத்தை தெளிவாக தெரிவிப்பார்கள். அங்கு சென்று மருத்துவர் இல்லையே என்று மீண்டும் போன் செய்தால் மருத்துவர் பற்றிய விவரத்தையும் உடனே தெரிவிப்பார்கள். அதுமட்டுமல்லாமல் சித்தா, ஓமியோபதி போன்ற இந்திய மருத்துவத்திலும் நோய்க்கான மருந்து விவரங்களைத் தெரிவிப்பார்கள். உதாரணமாக சிங்கம்புணரியில் 20 பேருக்கு காய்ச்சல் ஏற்பட்டுள்ளது, அங்கு உடனடியாக மருத்துவர்கள் வேண்டுமென்றும் எங்களுக்குத் தகவல் தெரிவித்தார்கள். தகவல் கிடைக்கப்பெற்ற உடன் அந்த இடத்திற்கு மருத்துவர்கள் சென்று உரிய சிகிச்சையினை மேற்கொள்ளப்பட்டது என தெரிவித்தார்.

56. பொது மக்கள் 104 மருத்துவ சேவை குறித்து முழு தகவலை அறியும் பொருட்டு இன்னும் கூடுதல் அளவு விளம்பரம் செய்யப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

XV. ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வரும் கர்ப்பிணிப் பெண்களுக்கு இருக்கை வசதி ஏற்படுத்துதல்

57. குழு மாவட்டங்களில் ஆய்வுப் பயணம் மேற்கொண்ட போது ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வரும் கர்ப்பிணிப் பெண்கள் இருக்கை வசதி இல்லாத காரணத்தால் கீழே அமர வேண்டிய நிலை ஏற்படுகிறது என்பதால் கர்ப்பிணிப் பெண்கள் அமரும் வகையில் போதிய இருக்கை வசதி செய்து தரப்பட வேண்டும் என்று குழுவிடம் கோரிக்கை வைக்கப்பட்டது.

58. குழுவிடம் வைக்கப்பட்ட கோரிக்கைக்கு துறையால் அரசு முதன்மைச் செயலாளர் இருக்கைகள் வாங்குவதற்கு போதுமான நிதிவசதி உள்ளது என்பதால் அனைத்து மருத்துவமனைகளுக்கும் உரிய இருக்கை வசதி செய்து தரப்படும் என்று தெரிவித்தார்.

59. ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வருகை தரும் கர்ப்பிணிப் பெண்கள் அமரும் வகையில் போதுமான இருக்கை வசதியினை மருத்துவமனைகளில் செய்து தரவேண்டும் என்று துறைக்கு குழு பரிந்துரை செய்கிறது.

XVI. திண்டுக்கல் மாவட்ட தலைமை மருத்துவமனையில் தலைக்காய சிகிச்சைப் பிரிவு தொடங்குதல்

60. குழு திண்டுக்கல் மாவட்டத்தில் ஆய்வுப் பயணம் மேற்கொண்ட போது திண்டுக்கல் அரசு தலைமை மருத்துவமனையில் தலைக்காய சிகிச்சை பிரிவு தொடங்கப்பெற வேண்டும் என குழுவிடம் கோரிக்கை வைக்கப்பட்டது.

61. குழுவின் கோரிக்கைக்கு அரசு முதன்மைச் செயலாளர் துறையின் அரசாணை எண்.179 நாள் 14.5.2018–இன்படி Tamil Nadu Accident and Emergency Care Initiative (TAEI) திட்டம் மூலமாக 9 அரசு மருத்துவமனைகளில் Trauma Care Centre அமைப்பதற்கு ஆணையிடப்பட்டுள்ளது என்றும், அந்த 9 மருத்துவமனைகளில் திண்டுக்கல் மாவட்ட தலைமை மருத்துவனை Level-II Trauma Care Centre ஆக அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்றும், அங்கு 8 நிரந்தர செவிலியர்கள், 8 MBBS மருத்துவர்கள், 4 Radiographist, X-ray Technician பதவிகளுக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளதாக குழுவிற்கு தெரிவித்தார்.

62. அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள 9 அரசு மருத்துவமனைகள் நீங்கலாக இதர மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளிலும் மேற்படி பிரிவின் அலகு (Unit) துவங்கப்பெற வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

63. குழு திண்டுக்கல் மாவட்டத்தில் மூன்று தேசிய நெடுஞ்சாலைகள், அதாவது, NH 45, NH 7 and NH 209 அமைந்திருக்கின்றன என்றும் அம்மாவட்டத்தில் அமைந்துள்ள தேசிய நெடுஞ்சாலைகளில் அதிகமான சாலை விபத்துகள் ஏற்படுகின்றன. அவற்றில் தலைக் காயம் சம்பந்தமான விபத்துகள் அதிகம் ஏற்படுகின்றது என்றும், அந்தச் சாலைகளில் Accident Trauma Centres ஏதும் செயல்படவில்லை என்பதால் சென்னை சாலையில் அல்லது பெங்களுர் சாலையில் Accident Trauma Centre அமைக்கப்பெற்றால் நன்றாக இருக்கும் என குழு சார்பாக தகவலில் தெரிவிக்கப்பட்டது. குறிப்பாக, இந்த Accident Trauma Centre வடமதுரையில் அமைத்தால் நன்றாக இருக்கும் என்பது குழுவினுடைய கருத்து. மேலும், திண்டுக்கல்லில் உள்ள சென்னை நெடுஞ்சாலையில் ஒரு Emergency Stabilization Centre அமைக்கப்பட்டால்கூட சிறப்பாக இருக்கும். எனவே,

வடமதுரை அல்லது அய்யலூர் ஆகிய இரண்டு இடங்களும் Vantage Points–ஆக இருக்கும் என்று குழு தனது கருத்தினை தெரிவித்தது.

64. குழுவின் கோரிக்கைக்கு அரசு முதன்மைச் செயலாளர் மணப்பாறை அரசு மருத்துவமனையில் மருத்துவ வசதிகளையும், மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களைக் கூடுதலாக நியமனம் செய்வதற்காக ஓர் அரசாணை கடந்த இரு வாரங்களுக்கு முன்பு வெளியிடப்பட்டிருக்கிறது. துறை அந்த அரசாணையைத் அனுப்பி வைக்கப்படும் என குழுவிடம் தெரிவித்தார்.

65. இருப்பினும், திண்டுக்கல் மணப்பறையில் Emergency Accident Trauma Care Centre–ம், திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள ஏதேனும் ஒரு நெடுஞ்சாலையில் ஒரு முக்கியமான இடத்தில், குழு கூறியதுபோல, வடமதுரை அல்லது அய்யலூரில் Emergency Stabilization Centre அமைப்பதற்கு துறை முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதை குழுவிடம் தெரிவித்தார்.

66. துறையால் தேர்வு செய்யப்படும் இடத்தில் Accident Trauma Care Centre மற்றும் Emergency Stabilization Centre ஆகியவை முறையே அமைக்கப்பெற வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

XVII. வட்டம் சார்ந்த அரசு மருத்துவமனைகளின் சி.டி. ஸ்கேன் வசதி ஏற்படுத்துதல்

67. தமிழ்நாட்டில் செயல்படும் அனைத்து வட்டம் சார்ந்த அரசு மருத்துவமனைகளில் சி.டி. ஸ்கேன் மையம் உள்ளதா என குழு அறிய விரும்பியது.

68. குழு கோரியதற்கு மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் மொத்தம் 58 மையங்கள் செயல்படுவதாகவும், 74 இயந்திரங்கள் இயங்குகிறது என்றும் தெரிவித்தார்.

69. குழு தமிழ்நாட்டில் செயல்படும் வட்டம் சார்ந்த அரசு மருத்துவமனைகளில் படிப்படியாக (Phased Manner) சி.டி.ஸ்கேன் இயந்திரம் நிறுவப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

XVIII. பொதட்டூர்பேட்டை வட்டம் சாரா அரசு மருத்துவமனையை மேம்படுத்துதல்

70. குழு, திருவள்ளூர் மாவட்டம், பொதட்டூர்பேட்டை வட்டம் சாரா அரசு மருத்துவமனையை மேம்படுத்த வேண்டும் என்றும், ஊத்துக்கோட்டையில் இலட்சிவாக்கம் என்ற இடத்தில் தாய்–சேய் நல மையம் ஒன்று செயல்படுகிறது என்றும், அங்கு நூற்றுக்கணக்காணவர்கள் மேல் சிகிச்சை பெறுவதற்கு வருகை புரிகிறார்கள் என்றும், அந்த தாய்–சேய் நல மையத்தை துறை மேம்படுத்த வேண்டும் என்று குழுவிடம் கோரிக்கை வைக்கப்பட்டது.

71. குழுவிடம் கோரிக்கை வைக்கப்பட்ட காரணத்தால் துறை இது குறித்து உரிய நடவடிக்கையினை மேற்கொண்டு, தாய்–சேய் நல மையத்தை மேம்படுத்த உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

72. குழு விருதுநகர் மாவட்டத்தில் ஆய்வுப் பயணம் மேற்கொண்டபோது நரிக்குடி, திருச்சுழி, காரியாபட்டி, அருப்புக்கோட்டை, சாத்தூர், விருதுநகர் ஆகிய அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை Universal Health Coverage Project மூலம் மேம்படுத்த வேண்டும் என்று குழுவிடம் கோரிக்கை வைக்கப்பட்டது. இது குறித்து கருத்துரு ஏதேனும் துறையிடம் வரப்பெற்றுள்ளதா என குழு அறிய விரும்பியது.

73. குழு கோரியதற்கு துறை அனைவருக்கும் நலவாழ்வுத் திட்டத்தின் கீழ் 2017–2018–ஆம் ஆண்டில் ஒரு சுகாதார மாவட்டத்தில் ஒரு வட்டாரம் என்ற அடிப்படையில் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது. அத்திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரத்தில் உள்ள அனைத்து துணை சுகாதார நிலையங்களை மத்திய அரசின் உதவியோடு கிராம நலவாழ்வு மையங்களாக மாற்றப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும், விருதுநகர் சுகாதார மாவட்டத்தில், நரிக்குடி வட்டாரமும், சிவகாசி சுகாதார மாவட்டத்தில் சாத்தூர் வட்டாரமும் தேர்ந்தெடுக்கப்பட்டு அவ்வட்டாரங்களில் உள்ள 40 துணை சுகாதார நிலையங்களை கிராம நலவாழ்வு மையங்களாக மாற்றுவதற்காக கட்டடங்களை பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல், சாய்தளம் கட்டுதல் (Ramp Construction), தண்ணீர் வசதி ஏற்படுத்துதல், உயிரி மருத்துவ கழிவு மேலாண்மை (BioMedical Waste), கணினி மற்றும் உபகரணங்கள் வாங்குதல், சூரிய மின்கலம் அமைத்தல், மருந்துகள், ஆய்வக மற்றும் வேதியியல் பொருட்கள் வாங்குதல், தகவல் மற்றும் கல்வி தொடர்பு பயிற்சி அளித்தல், சுகாதாரப் பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும் துறையால் தெரிவிக்கப்பட்டது.

74. மேலும், விருதுநகர் சுகாதார மாவட்டத்தில் உள்ள வெம்பக்கோட்டை, வத்திராயிருப்பு, காரியாப்பட்டி, நரிக்குடி மற்றும் சாத்தூர் வட்டாரங்களில் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி (SBGF) மூலம் துணை சுகாதார நிலையங்கள் மேம்பாட்டிற்காக ரூ.7,86,00,000/– நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. மேலும், 5 துணை சுகாதார நிலையங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டுவதற்காக ரூ.60,00,000/– இந்நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ளது. காரியாப்பட்டி வட்டாரத்திற்குட்பட்ட மல்லான்கிணறு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மகப்பேறு மருத்துவப் பிரிவு, 10 படுக்கை வசதி கொண்ட தொற்றுநோய் தடுப்பு பிரிவு, புறநோயாளிகளின் பிரிவு மற்றும் காத்திருப்போர் ஒய்வு அறை ஆகிய புது கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. முஸ்டக்குறிச்சி ஆரம்ப சுகாதார நிலையத்தில் செவிலியர் குடியிருப்பு, மகப்பேறு மருத்துவப் பிரிவு மற்றும் 5 படுக்கைகள் கொண்ட பொது சிகிச்சை பிரிவு கட்டி முடிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. முடுக்கன்குளம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் புளியங்குளம் துணை சுகாதார நிலையம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்நிலையத்தில் இதர மருத்துவ உபகரணங்கள் வாங்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது. நரிக்குடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் Neo-natal Ambulance வாங்கப்பட்டுள்ளது. மேலும் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியின் கீழ் விருதுநகர் சுகாதார மாவட்டத்தில் 2015 –2016 ஆம் ஆண்டில் பனையூர், கீள்வாய்க்குளம், தர்மம், இருஞ்சிறை, சத்ர புளியங்குளம் ஆகிய 5 துணை சுகாதார நிலையங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது என்றும் துறையால் தெரிவிக்கப்பட்டது.

75. குழுவிடம் கோரிக்கையாக வைக்கப்பெற்ற நரிக்குடி, திருச்சுழி, காரியாப்பட்டி, அருப்புக்கோட்டை, சாத்தூர், விருதுநகர் ஆகிய அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை Universal Health Coverage Project மூலம் மேம்படுத்தத் துறை உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

XIX. 2017–2018–ஆம் ஆண்டில் தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தின் கீழ் துறையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை

76. 2017–2018–ஆம் ஆண்டில் தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தின் கீழ் துறையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து குழு அறிய விரும்பியது.

77. இந்திய அளவில் செயல்படுத்தப்பட்டது போல் தொழுநோயை ஆரம்ப நிலையில் கண்டறியவும், முற்றிலும் குணப்படுத்தும் நோக்கத்துடனும் 1954–1955–இல் தமிழகத்திலும் தொழுநோய் ஒழிப்பு திட்டமானது துவக்கப்பட்டது. தொழுநோயால் பாதிக்கப்பட்டோரின் விகிதமானது 1983–இல் 10,000 மக்கள் தொகைக்கு 118 என்ற அளவில் இருந்தது. 2005 ம் வருடம் இவ்விகிதம் 10,000 மக்கள் தொகைக்கு ஒன்றின் கீழ் என்ற நிலைக்கு குறைந்து, தமிழகம் தொழுநோய் பாதிப்பு இல்லா நிலையை எட்டியது.

78. மார்ச் 2018–இல் 10,000 மக்கள் தொகைக்கு 0.39 என்ற நிலையை எட்டியுள்ளது. 2017–2018–இல் அதிக நோய்த் தாக்கம் காணப்பட்ட 20 வட்டாரங்கள் மற்றும் களப்பணியாளர்கள் எளிதில் சென்றடைய முடியாத 34 பகுதிகளிலும் தீவிர தொழுநோய் ஒழிப்பு பணி மேற்கொள்ளப்பட்டது. தமிழ்நாட்டில் கூடுதல் இயக்குநர் மருத்துவ பணிகள் (தொழுநோய்) தலைமையில் பொது சுகாதாரத்துறையுடன் இணைந்து அனைத்து மாவட்டங்களிலும், துணை இயக்குநர்கள் (தொழுநோய்) மற்றும் துணை இயக்குநர்கள் சுகாதார பணிகள் மேற்பார்வையில் தொழுநோய் பணிகள் செவ்வனே மேற்கொள்ளபட்டதில், கடந்த ஆண்டு புதியதாக 4,277 தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு கூட்டு மருந்து சிகிச்சை அளிக்கப்பட்டு குணப்படுத்தப்பட்டார்கள். தொழுநோயால் ஊனமடைந்த 118 நபர்களுக்கு மறு சீரமைப்பு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு பராமரிப்பு தொகையாக தலா ரூபாய் 8,000/– வழங்கப்பட்டது.

79. மார்ச் 2018–ல் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 9,498 எம்.சி.ஆர் (MCR Foot Wear) சிறப்பு காலணிகளும், 13,429 நபர்களுக்கு சுய பாதுகாப்பு மருத்துவ உபகரணம் வழங்கப்பட்டது. தற்பொழுது தொழுநோயால் ஊனமுற்ற 7,593 நபர்களுக்கு தமிழக அரசின் மாதாந்திர உதவித் தொகையாக ரூபாய் 1,500/– வழங்கப்படுகிறது. 2018–2019–இல் அதிக நோய் தாக்கம் காணப்பட்ட 87 வட்டாரங்களில் தீவிர தொழுநோய் கண்டுபிடிப்பு பணிகள் நடைபெற உள்ளது.

80. அதிக நோய் தாக்கமுள்ள 87 வட்டாரங்களில் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களை கண்டறிந்து உரிய சிகிச்சையினை விரைந்து அளித்து அவர்களின் நோயின் தாக்கத்திலிருந்து விடுபட துறை துரித நடவடிக்கையினை மேற்கொள்ள குழு பரிந்துரை செய்கிறது.

சென்னை – 600 009,
நாள்: 4.7.2018,
ஆனி 20,
திருவள்ளுவர் ஆண்டு, 2049.

பி.எம். நரசிம்மன்,
தலைவர்,
மதிப்பீட்டுக் குழு.

பாகம்–2
நிகழ்ச்சி பகுதி

துன்முகி, பங்குனி 10 – திருவள்ளுவர் ஆண்டு 2048

2017 மார்ச் 23, வியாழக்கிழமை

பதினைந்தாவது பேரவையின் 2016–2017 ஆம் ஆண்டிற்கான நிதி நிலைக் குழுக்களான மதிப்பீட்டுக் குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு ஆகியவைகளின் தொடக்கக் கூட்டம் 2017 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23 ஆம் நாள், வியாழக்கிழமை மாலை 4.00 மணியளவில் சென்னை–9, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வளாகத்தில் உள்ள குழுக் கூட்ட அறையில் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர், மாண்புமிகு மீன்வளம், நிதி, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர், மதிப்பீட்டுக் குழுத் தலைவர், பொதுக் கணக்குக் குழுத் தலைவர், பொது நிறுவனங்கள் குழுத் தலைவர் மற்றும் மாநில கணக்காய்வுத் தலைவர் (பொது மற்றும் சமூகப் பிரிவு தணிக்கை) மாநில துணை கணக்காய்வுத் தலைவர் (பொருளாதாரம் மற்றும் வருவாய் பிரிவு தணிக்கை) ஆகியோர் கலந்து கொண்டனர்.

அக்கூட்டத்தில் மதிப்பீட்டுக் குழு சார்பில் கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர்:–

தலைவர்

திரு. பி.எம். நரசிம்மன்

உறுப்பினர்கள்

திரு. எஸ்.ஆர். இராஜா
திரு. ஆர். கனகராஜ்
திரு. இரா. குமரகுரு
திரு. அர. சக்கரபாணி
திரு. எஸ். சுதர்சனம்
திரு. S. செல்வமோகன்தாஸ் பாண்டியன்
திரு. தங்கம் தென்னரசு
திரு. ஏ.பி. நந்தகுமார்
டாக்டர் V.P.B. பரமசிவம்
திரு. கே.பி.பி. பாஸ்கர்
திருமதி ப. மனோன்மணி
திரு. செ. ராஜேஷ் குமார்
திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்

செயலகம்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன் . . செயலாளர்
திருமதி இரா. சாந்தி . . இணைச் செயலாளர்
திரு. செ பாண்டியன் . . துணைச் செயலாளர்
திரு. மு. கருணாகரன் . . சார்புச் செயலாளர்
திருமதி பா. ரேவதி . . சார்புச் செயலாளர்
திரு. க.லோ. சிவகுமரன் . . சார்புச் செயலாளர்

மேற்படிக் கூட்டத்தில் மூன்று நிதிக் குழுக்களின் முக்கியத்துவம், பணிகள் மற்றும் செயல்பாடுகள் குறித்து விரிவாக மாண்புமிகு உறுப்பினர்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

ஹேவிளம்பி, சித்திரை 13 – திருவள்ளுவர் ஆண்டு 2048

2017 ஏப்ரல் 26, புதன்கிழமை

2016–2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு முதற் கூட்டம் 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 26 ஆம் நாள், புதன்கிழமை, காலை 11.00 மணியளவில், நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் உள்ள 'தமிழகம்' அரசு சுற்றுலா மாளிகையிலுள்ள கூட்ட அரங்கில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர்:–

தலைவர்

திரு. பி.எம். நரசிம்மன்

உறுப்பினர்கள்

திரு. எஸ்.ஆர். இராஜா
திரு. ஆர். கனகராஜ்
திரு. அர. சக்கரபாணி
திரு. எஸ். சுதர்சனம்
திரு. S. செல்வமோகன்தாஸ் பாண்டியன்.
திரு. ஏ.பி. நந்தகுமார்
டாக்டர் V.P.B. பரமசிவம்
திரு. கே.பி.பி. பாஸ்கர்
திருமதி ப. மனோன்மணி
திரு. செ. ராஜேஷ் குமார்
திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்

செயலகம்

திருமதி இரா. சாந்தி . . இணைச் செயலாளர்

திரு. இரா. இராஜேந்திரன் . . சார்புச் செயலாளர்

குழு, பள்ளிக்கல்வி மற்றும் கிராம சாலைகள் குறித்த 2008–2009, 2009–2010 மற்றும் 2011–2012 ஆம் ஆண்டுகளுக்கான மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளின் மீது துறைகள் எடுத்த நடவடிக்கை குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறைகளின் இதர அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

குழு, உதக மண்டலத்திலுள்ள 'தமிழகம்' சுற்றுலா மாளிகையில் இரவு தங்கியது.

ஹேவிளம்பி சித்திரை 14, – திருவள்ளுவர் ஆண்டு 2048

2017 ஏப்ரல் 27, வியாழக்கிழமை

2016–2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 27 ஆம் நாள், வியாழக்கிழமை, காலை 10.00 மணியளவில், நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் உள்ள 'தமிழகம்' அரசு சுற்றுலா மாளிகையிலுள்ள கூட்ட அரங்கில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர்:–

தலைவர்

திரு. பி.எம். நரசிம்மன்

உறுப்பினர்கள்

திரு. எஸ்.ஆர். இராஜா
திரு. ஆர். கனகராஜ்
திரு. அர. சக்கரபாணி
திரு. எஸ். சுதர்சனம்
திரு. S. செல்வமோகன்தாஸ் பாண்டியன்
திரு. ஏ.பி. நந்தகுமார்
டாக்டர் V.P.B. பரமசிவம்
திரு. கே.பி.பி. பாஸ்கர்
திருமதி ப. மனோன்மணி
திரு. செ. ராஜேஷ் குமார்
திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்

செயலகம்

திருமதி இரா. சாந்தி . . இணைச் செயலாளர்

திரு. இரா. இராஜேந்திரன் . . சார்புச் செயலாளர்

குழு, புதுமந்து ஊராட்சியில் உள்ள கோழிப் பண்ணையில் சாலையை மேம்படுத்தும் பணியை பார்வையிட்டது. அப்போது திட்ட இயக்குநர் மற்றும் செயற்பொறியாளர் ஆகியோர் சாலை மேம்பாட்டு பணிகள் குறித்து குழுவிற்கு விவரித்தனர். அப்போது ரூ.139.80 இலட்சம் மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வரும் பணிகளை குழு பார்வையிட்டது.

பின்னர் குழு, நடுவட்டம் ஊராட்சியில் உள்ள அனுமந்தபுரம், இந்திரா நகர் குடியிருப்பில் பசுமை வீடுகள் திட்டத்தில் கட்டப்பட்டிருந்த வீடுகளை பார்வையிட்டது.

பின்னர் குழு, நடுவட்டம் கடைத்தெருவில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் வணிக வளாகத்தைப் பார்வையிட்டது. இந்த பணி முடிவுற்ற பின் வணிக வளாகத்திலிருந்து பெறப்படும் வாடகை மூலம் நடுவட்டம் ஊராட்சிக்கு வருமானம் கிடைக்கும் என குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது.

குழு, உதக மண்டலத்திலுள்ள 'தமிழகம்' சுற்றுலா மாளிகையில் இரவு தங்கியது.

ஹேவிளம்பி, சித்திரை 15, – திருவள்ளுவர் ஆண்டு 2048

2017 ஏப்ரல் 28, வெள்ளிக்கிழமை

2016–2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28 ஆம் நாள், வெள்ளிக்கிழமை, காலை 9.30 மணியளவில், நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் உள்ள 'தமிழகம்' அரசு சுற்றுலா மாளிகையிலுள்ள கூட்ட அரங்கில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர்:–

தலைவர்

திரு. பி.எம். நரசிம்மன்

உறுப்பினர்கள்

திரு. ஆர். கனகராஜ்
திரு. S. செல்வமோகன்தாஸ் பாண்டியன்
டாக்டர் V.P.B. பரமசிவம்
திரு. கே.பி.பி. பாஸ்கர்
திரு. செ. ராஜேஷ் குமார்
திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்

செயலகம்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன் . . செயலாளர்

திருமதி இரா. சாந்தி . . இணைச் செயலாளர்

திரு. இரா. இராஜேந்திரன் . . சார்புச் செயலாளர்

குழு, வனம், சுற்றுலா மற்றும் பால்வளம் குறித்த 2008–2009, 2009–2010 மற்றும் 2011–2012 ஆம் ஆண்டுகளுக்கான மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளின் மீது துறை எடுத்த நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறைகளின் இதர அலுவலர்களுடன் கலந்துரையாடியது.

குழுவிற்கு, 2017–2018 ஆம் ஆண்டு முதல் வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகள் மற்றும் கணக்குகளில் திட்டம் மற்றும் திட்டம் சாரா வகைப்பாட்டினை ஒன்றிணைப்பது குறித்து நிதித் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களால் விளக்கமளிக்கப்பட்டது.

பின்னர், குழு கீழ்க்கண்ட துறைகளின் மதிப்பீடுகளை தனது ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதென முடிவு செய்தது :

1. "ஆதி திராவிடர் நலன்"
2. "பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து/ மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள்"
3. "நகராட்சி நிருவாகம்"
4. "பள்ளிக் கல்வி"
5. "சமூக நலம்"

ஹேவிளம்பி, வைகாசி 9, – திருவள்ளுவர் ஆண்டு 2048

2017 மே 23, செவ்வாய்க்கிழமை

2016–2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு 2017 ஆம் ஆண்டு மே திங்கள் 23 ஆம் நாள், செவ்வாய்க்கிழமை, காலை 10.00 மணியளவில், தேனி மாவட்டம், அரசு சுற்றுலா மாளிகையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. பி.எம். நரசிம்மன்

உறுப்பினர்கள்

திரு. எஸ்.ஆர். இராஜா
திரு. ஆர். கனகராஜ்
திரு. கே.பி.பி. சாமி
திரு. எஸ். சுதர்சனம்
திரு. S. செல்வமோகன்தாஸ் பாண்டியன்
டாக்டர் V.P.B. பரமசிவம்
திரு. கே.பி.பி. பாஸ்கர்
திருமதி ப. மனோன்மணி
திரு. செ. ராஜேஷ் குமார்
திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்

செயலகம்

திரு. கே. ரமேஷ் . . துணைச் செயலாளர்

திரு. இரா. இராஜேந்திரன் . . சார்புச் செயலாளர்

குழு, ஆண்டிப்பட்டி அரசு மருத்துவமனை 1959 முதல் 1990 வரை செவிலியர்கள் உதவியுடன் சிறு மருத்துவமனையாக செயல்பட்டு வந்தது. 1990 ஆம் ஆண்டு ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு அனேக நோயாளிகள் பயன்பெற்று வந்தனர். இதன் தனிச் சிறப்பாக 1991 ஆம் ஆண்டு அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டு 1992 ஆம் ஆண்டு அறுவை அரங்குடன் கூடிய மகப்பேறு பிரிவு ஸ்கேன் வசதியும், நுண்கதிர் வசதியும் 1993 ஆம் ஆண்டு சித்த மருத்துவப் பிரிவு, 1994 ஆம் ஆண்டு பல் மருத்துவப்பிரிவு 2006 ஆம் ஆண்டு புற நோயாளிகள் பிரிவு 2007 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த ஆலோசனை மற்றும் பரிசோதனை மையமும் 2010 ஆம் ஆண்டு இயன்முறை சிகிச்சை முறையும், 2012 ஆம் ஆண்டு தொற்று நோய் பிரிவும், 108 ஆம்புலன்ஸ் சேவையும் துவங்கப்பட்டன என்றும் தெரிவித்தனர்.

பின்னர், மாலையில் தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறை அதிகாரிகளுடன் குழுவின் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

குழு, திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் சென்று அங்குள்ள தமிழ்நாடு ஓட்டலில் இரவு தங்கியது.

ஹேவிளம்பி, வைகாசி 10, – திருவள்ளுவர் ஆண்டு 2048

2017 மே 24, புதன்கிழமை

2016–2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு 2017 ஆம் ஆண்டு மே திங்கள் 24 ஆம் நாள், புதன்கிழமை, காலை 10.00 மணியளவில், திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலில் உள்ள தமிழ்நாடு ஓட்டலில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. பி.எம். நரசிம்மன்

உறுப்பினர்கள்

திரு. எஸ்.ஆர். இராஜா
திரு. ஆர். கனகராஜ்
திரு. இரா. குமரகுரு
திரு. அர. சக்கரபாணி
திரு. கே.பி.பி. சாமி
திரு. எஸ். சுதர்சனம்
திரு. S. செல்வமோகன்தாஸ் பாண்டியன்
டாக்டர் V.P.B. பரமசிவம்
திரு. கே.பி.பி. பாஸ்கர்
திருமதி ப. மனோன்மணி
திரு. வி.வி. ராஜன் செல்லப்பா
திரு. செ. ராஜேஷ் குமார்
திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்

செயலகம்

திரு. கே. ரமேஷ் . . துணைச் செயலாளர்

திரு. இரா. இராஜேந்திரன் . . சார்புச் செயலாளர்

குழு, திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் தாலுகா அரசு மருத்துவமனை 1926–ஆம் ஆண்டு ஜூலை 24 ஆம் நாள் துவங்கப்பட்டு 62 படுக்கை வசதிகள் கொண்டதாக இம்மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. அவசர சிகிச்சை பிரிவுகள் 24 மணி நேரமும், உள்நோயாளிகள் பிரிவு, வெளிநோயாளிகள் பிரிவு, தாய்சேய் நலப்பணிகள், பிரசவ சேவைகள் மற்றும் 24 மணி நேர அறுவை சிகிச்சை வசதிகளும் செய்யப்பட்டுள்ளன என குழுவிடம் தெரிவித்தனர்.

குழு, திண்டுக்கல் மாவட்டத்தில் கொடைக்கானல் தமிழ்நாடு ஓட்டலில் இரவு தங்கியது.

ஹேவிளம்பி, வைகாசி 11, – திருவள்ளுவர் ஆண்டு 2048

2017 மே 25, வியாழக்கிழமை

2016–2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு 2017 ஆம் ஆண்டு மே திங்கள் 25 ஆம் நாள், வியாழக்கிழமை, காலை 10.00 மணியளவில், திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலில் உள்ள தமிழ்நாடு ஓட்டலில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. பி.எம். நரசிம்மன்

உறுப்பினர்கள்

திரு. எஸ்.ஆர். இராஜா
திரு. ஆர். கனகராஜ்
திரு. இரா. குமரகுரு
திரு. அர. சக்கரபாணி
திரு. கே.பி.பி. சாமி
திரு. எஸ். சுதர்சனம்
திரு. S. செல்வமோகன்தாஸ் பாண்டியன்
டாக்டர் V.P.B. பரமசிவம்
திரு. கே.பி.பி. பாஸ்கர்
திருமதி ப. மனோன்மணி
திரு. வி.வி. ராஜன் செல்லப்பா
திரு. செ. ராஜேஷ் குமார்
திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்

செயலகம்

திரு. கே. ரமேஷ் . . துணைச் செயலாளர்

திரு. இரா. இராஜேந்திரன் . . சார்புச் செயலாளர்

குழு, திண்டுக்கல் மாவட்டத்தில் அரசு தலைமை மருத்துவமனையை குழு பார்வையிட்டது. ஒருங்கிணைந்த மதுரை மாவட்டத்தில் இருந்த திண்டுக்கல், 1985 தனி மாவட்டமாக அறிவிக்கப்பட்டு, திண்டுக்கல் அரசு தலைமை மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது என்று குழுவிடம் தெரிவித்தனர்.

இம்மருத்துவமனை 445 படுக்கைகள் மற்றும் புதிதாக 200 படுக்கை வசதிகளும் செய்யப்பட்டுள்ளன என்றும், விபத்து சிகிச்சைப் பிரிவு மற்றும் ஒருங்கிணைந்த சிசு கவனிப்புப் பிரிவு, தீவிர சிசு கவனிப்புப் பிரிவு, தாய்ப்பால் வங்கி, குடும்பநலப் பிரிவு தொழுநோய் பிரிவு, தீவிர கவனிப்புப் பிரிவு, டயாலிசிஸ், முதலமைச்சர் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் பிரிவு, 108 அவசர ஊர்தி மற்றும் 102 வசதி மற்றும் குளிரூட்டப்பட்ட பிணப் பரிசோதனை அறை வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

பின்னர், திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர், மற்றும் துறைகளின் அலுவலர்களுடன் குழுவின் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

ஹேவிளம்பி, ஆனி 23, – திருவள்ளுவர் ஆண்டு 2048

2017 ஜூலை 7, வெள்ளிக்கிழமை

2016–2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு, 2017 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 7 ஆம் நாள், வெள்ளிக்கிழமை மாலை 5.20 மணியளவில், சென்னை – 600 002, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு வளாக உபவசதி கட்டடத்தில் உள்ள குழுக் கூட்ட அறை எண்.1–இல் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. பி.எம். நரசிம்மன்

உறுப்பினர்கள்

திரு. எஸ்.ஆர். இராஜா
திரு. ஆர். கனகராஜ்
திரு. அர. சக்கரபாணி
திரு. கே.பி.பி. சாமி
திரு. எஸ். சுதர்சனம்
திரு. S. செல்வமோகன்தாஸ் பாண்டியன்
திரு. ஏ.பி. நந்தகுமார்
டாக்டர் V.P.B. பரமசிவம்
திரு. கே.பி.பி. பாஸ்கர்
திருமதி ப. மனோன்மணி
திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்

செயலகம்

திரு. க.லோ. சிவகுமரன் . . துணைச் செயலாளர்

குழு, சென்னை–600 002, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு வளாக உபவசதி கட்டடத்தில் உள்ள குழுக் கூட்ட அறை எண்.1–இல் மதிப்பீட்டுக் குழு (2016–2018), ஏற்கெனவே பேரவைக்கு அளிக்கப்பட்ட "இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு", "குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்" மற்றும் "சுற்றுலா" குறித்த வரைவு அறிக்கைகளுக்கு குழு ஒப்புதல் அளித்தது. குழுவினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட அறிக்கையை குழுவின் சார்பில் கையொப்பமிட்டு பேரவைக்கு அளிக்க குழுத் தலைவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது.

ஹேவிளம்பி, ஆடி 23, – திருவள்ளுவர் ஆண்டு 2048

2017 ஆகஸ்ட் 8, செவ்வாய்க்கிழமை

2016–2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 8 ஆம் நாள், செவ்வாய்க்கிழமை, காலை 10.00 மணியளவில், தூத்துக்குடி மாவட்டம், ஸ்பிக் நிறுவனத்தின் சாகர் சதன் சுற்றுலா மாளிகையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. பி.எம். நரசிம்மன்

உறுப்பினர்கள்

திரு. எஸ்.ஆர். இராஜா
திரு. ஆர். கனகராஜ்
திரு. எஸ். சுதர்சனம்
திரு. தங்கம் தென்னரசு
திரு. ஏ.பி. நந்தகுமார்
டாக்டர் V.P.B. பரமசிவம்
திரு. கே.பி.பி. பாஸ்கர்
திருமதி ப. மனோன்மணி
திரு. வி.வி. ராஜன் செல்லப்பா
திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்

செயலகம்

திரு. க.லோ. சிவகுமரன் . . துணைச் செயலாளர்

திரு. சு. பாலகிருஷ்ணன் . . துணைச் செயலாளர்

குழு, தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள மாப்பிள்ளையூரணி ஆரம்ப சுகாதார நிலையத்தை பார்வையிடச் சென்றது. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்தி தர வேண்டும் என குழுவிடம் கோரிக்கை வைக்கப்பட்டது.

குழு, கணேஷ் நகரில் உள்ள நகர சுகாதார நிலையத்தை பார்வையிடச் சென்றது. மாநகராட்சி ஆணையர் குழுவினை வரவேற்றார். தபால் தந்தி காலனி மற்றும் கணேஷ் நகர் ஆகிய பகுதிகளில் புதிய சுகாதார மையம் இரண்டு கட்டுவதற்கு தலா 42 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பணிகள் நடைபெறுவதை குழு பார்வையிட்டது.

மடத்தூரிலுள்ள நகர சுகாதார நிலையத்தின் ரூ.16. இலட்சம் மதிப்பீட்டில் 116 மீட்டர் நீளத்தில் சுற்றுச் சுவர் கட்டுவதற்கு நிருவாக அனுமதி பெற்று மாநகராட்சி பொது நிதியிலிருந்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகள் ஒரு மாத காலத்திற்குள் முடிவடையும் என்று குழுவிடம் தெரிவித்தனர்.

பின்னர் குழு, தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறை அதிகாரிகளுடன் கலந்துரையாடியது.

குழு, திருநெல்வேலி மாவட்டம் குற்றாலம் சென்று இரவு தங்கியது.

ஹேவிளம்பி, ஆடி 24, – திருவள்ளுவர் ஆண்டு 2048

2017 ஆகஸ்ட் 9, புதன்கிழமை

2016–2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 9 ஆம் நாள், புதன்கிழமை, காலை 10.00 மணியளவில், திருநெல்வேலி மாவட்டம், குற்றாலத்திலுள்ள கலைவாணர் கலையரங்கத்தில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. பி.எம். நரசிம்மன்

உறுப்பினர்கள்

திரு. எஸ்.ஆர். இராஜா
திரு. எஸ். சுதர்சனம்
திரு. S. செல்வமோகன்தாஸ் பாண்டியன்
திரு. தங்கம் தென்னரசு
திரு. ஏ.பி. நந்தகுமார்
டாக்டர் V.P.B. பரமசிவம்
திரு. கே.பி.பி. பாஸ்கர்
திருமதி ப. மனோன்மணி
திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்

செயலகம்

திரு. க.லோ. சிவகுமரன் . . துணைச் செயலாளர்

திரு. கு. பாலகிருஷ்ணன் . . துணைச் செயலாளர்

குழு, தென்காசி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையை பார்வையிட்டது. பச்சிளம் குழந்தை பராமரிப்பு மற்றும் நோயுற்ற பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு மையம் ரூ.6.65 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றது என தெரிவித்தனர்.

மேலும், இணை இயக்குநர் அவர்கள் அம்மருத்துவமனைக்கு அதிகளவில் நோயாளிகள் வருவதால் கூடுதல் படுக்கை வசதி, சலவை கூட வசதி, குடிநீர் சுத்திகரிப்பு ஆகியவை ஏற்படுத்தி தர வேண்டுமென குழுவிற்குத் தெரிவித்தனர்.

பின்னர், குழு குற்றாலம் கலைவாணர் கலையரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறை அதிகாரிகளுடன் கலந்துரையாடியது.

ஹேவிளம்பி, கார்த்திகை 5, – திருவள்ளுவர் ஆண்டு 2048

2017 நவம்பர் 21, செவ்வாய்க்கிழமை

2016–2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு 2017 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 21 ஆம் நாள், செவ்வாய்க்கிழமை, காலை 9.00 மணியளவில், சென்னை – 600 002, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு வளாக உபவசதி கட்டடத்தில் உள்ள குழுக் கூட்ட அறை எண்.1–இல் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. பி.எம். நரசிம்மன்

உறுப்பினர்கள்

திரு. எஸ்.ஆர். இராஜா
திரு. ஆர். கனகராஜ்
திரு. இரா. குமரகுரு
திரு. கே.பி.பி. சாமி
திரு. எஸ். சுதர்சனம்
திரு. S. செல்வமோகன்தாஸ் பாண்டியன்
டாக்டர் V.P.B. பரமசிவம்
திரு. கே.பி.பி. பாஸ்கர்
திருமதி ப. மனோன்மணி

செயலகம்

திரு. க. பூபதி . . செயலாளர்

திரு. க.லோ. சிவகுமரன் . . துணைச் செயலாளர்

திரு. சு. பாலகிருஷ்ணன் . . குழு அலுவலர் (பொ.க.கு)

குழு, மாதவரம் தாலுகா மருத்துவமனையை பார்வையிட்டது. திருவள்ளூர் அரசு மருத்துவமனையை பார்வையிட சென்றது. இணை இயக்குநர் (சுகாதாரம்) மற்றும் மருத்துவர்கள் குழுவினை வரவேற்றனர். இம்மருத்துவமனை முலமைச்சரின் காப்பீட்டுத் திட்டத்தில் மருத்துவமனையாக சேர்க்கப்பட்டு மகப்பேறு அறுவை சிகிச்சை மற்றும் காது, மூக்கு, தொண்டை அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டு வருகிறது.

பின்னர், குழு திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறை அதிகாரிகளுடன் கலந்துரையாடியது.

குழு, காஞ்சிபுரம் அரசு விருந்தினர் மாளிகையில் சென்று இரவு தங்கியது.

ஹேவிளம்பி, கார்த்திகை 6, – திருவள்ளுவர் ஆண்டு 2048

2017 நவம்பர் 22, புதன்கிழமை

2016–2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு 2017 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 22 ஆம் நாள், புதன்கிழமை, காலை 10.00 மணியளவில், காஞ்சிபுரம் மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. பி.எம். நரசிம்மன்

உறுப்பினர்கள்

திரு. எஸ்.ஆர். இராஜா
திரு. ஆர். கனகராஜ்
திரு. இரா. குமரகுரு
திரு. எஸ். சுதர்சனம்
திரு. S. செல்வமோகன்தாஸ் பாண்டியன்
திரு. கே.பி.பி. பாஸ்கர்
திருமதி ப. மனோன்மணி

செயலகம்

திரு. க. பூபதி . . செயலாளர்

திரு. க.லோ. சிவகுமரன் . . துணைச் செயலாளர்

திரு. சு. பாலகிருஷ்ணன் . . குழு அலுவலர் (பொ.க.கு)

குழு, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறை அதிகாரிகளுடன் கலந்துரையாடியது.

பின்னர், குழு, திருப்புக்குழியிலுள்ள அரசு சமுதாய சுகாதார நிலையத்தினை பார்வையிட்டது. அன்றைய தினம் பிறந்த இரண்டு குழந்தைகளின் தாய்மார்களுக்கு "அம்மா குழந்தை நலப்பெட்டகம்" மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அவர்களால் வழங்கப்பட்டது. பின்னர், குழு இச்சுகாதார மையத்தின் பின்புறம் கட்டப்பட்டு வரும் பயிற்சி பள்ளியினை பார்வையிட்டது.

ஹேவிளம்பி, தை 26, – திருவள்ளுவர் ஆண்டு 2049

2018 பிப்ரவரி 8, வியாழக்கிழமை

2016–2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு 2018 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 8 ஆம் நாள், வியாழக்கிழமை, காலை 10.00 மணியளவில், விருதுநகர் மாவட்டத்திலுள்ள பொதுப் பணித்துறை ஆய்வு மாளிகையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. பி.எம். நரசிம்மன்

உறுப்பினர்கள்

திரு. எஸ்.ஆர். இராஜா
திரு. ஆர். கனகராஜ்
திரு. இரா. குமரகுரு
திரு. S. செல்வமோகன்தாஸ் பாண்டியன்
திரு. தங்கம் தென்னரசு
திரு. ஏ.பி. நந்தகுமார்
டாக்டர் V.P.B. பரமசிவம்
திரு. கே.பி.பி. பாஸ்கர்

செயலகம்

திரு. க.லோ. சிவகுமரன் . . துணைச் செயலாளர்

திரு. சு. பாலகிருஷ்ணன் . . குழு அலுவலர் (பொ.க.கு)

குழு, விருதுநகர் மாவட்டம் சாத்தூர் அரசு மருத்துவமனையை பார்வையிடச் சென்றது. தேசிய நெடுஞ்சாலையில் சாத்தூர் அரசு மருத்துவமனை பழைய மற்றும் புதிய மருத்துவமனை என இரு வேறு இடங்களில் செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனைக்கு Pediatric Ward, X-ray Blood, POP Ward தேவைப்படுதாகவும் குழுவிடம் தெரிவித்தனர்.

பின்னர், குழு விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலுள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறை அதிகாரிகளுடன் கலந்துரையாடியது.

குழு, மதுரை அரசு விருந்தினர் மாளிகையில் சென்று இரவு தங்கியது.

ஹேவிளம்பி, தை 27, – திருவள்ளுவர் ஆண்டு 2049

2018 பிப்ரவரி 9, வெள்ளிக்கிழமை

2016–2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு 2018 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 9 ஆம் நாள், வெள்ளிக்கிழமை, காலை 10.00 மணியளவில், மதுரை மாவட்டத்திலுள்ள அரசு சுற்றுலா மாளிகையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. பி.எம். நரசிம்மன்

உறுப்பினர்கள்

திரு. எஸ்.ஆர். இராஜா
திரு. ஆர். கனகராஜ்
திரு. இரா. குமரகுரு
திரு. S. செல்வமோகன்தாஸ் பாண்டியன்
திரு. தங்கம் தென்னரசு
திரு. ஏ.பி. நந்தகுமார்
டாக்டர் V.P.B. பரமசிவம்
திரு. கே.பி.பி. பாஸ்கர்
திரு. வி.வி. இராஜன் செல்லப்பா

செயலகம்

திரு. க.லோ. சிவகுமரன் . . துணைச் செயலாளர்

திரு. சு. பாலகிருஷ்ணன் . . குழு அலுவலர் (பொ.க.கு)

குழு, மதுரை மாவட்டத்திலுள்ள அரசு ராஜாஜி மருத்துவமனையை பார்வையிட்டது. மேலும், இம்மருத்துவமனை மூன்றாம் பரிந்துரை என்பதாலும் சீமாங்க் மருத்துவமனை என்பதாலும், அருகிலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், தேனி, சிவகங்கை மற்றும் தென்மாவட்டங்களில் உள்ள அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலிருந்தும் High Risk உள்ள தாய்மார்கள் இம்மருத்துவமனைக்கு பரிந்துரை செய்யப்படுகின்றனர். மருத்துவமனை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரிக்கப்பட்டு வருவதை குழு தனது பாராட்டை தெரிவித்தது.

பின்னர், குழு மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலுள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறை அதிகாரிகளுடன் கலந்துரையாடியது.

ஹேவிளம்பி, மாசி 8, – திருவள்ளுவர் ஆண்டு 2049

2018 பிப்ரவரி 20, செவ்வாய்க்கிழமை

2016–2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு 2018 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 20 ஆம் நாள், செவ்வாய்க்கிழமை, முற்பகல் 11.15 மணியளவில், சென்னை – 600 002, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு வளாக உபவசதி கட்டடத்தில் உள்ள குழுக் கூட்ட அறை எண்.1–இல் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. பி.எம். நரசிம்மன்

உறுப்பினர்கள்

திரு. எஸ்.ஆர். இராஜா
திரு. ஆர். கனகராஜ்
திரு. கே.பி.பி. சாமி
திரு. எஸ். சுதர்சனம்
திரு. S. செல்வமோகன்தாஸ் பாண்டியன்
திரு. ஏ.பி. நந்தகுமார்
டாக்டர் V.P.B. பரமசிவம்
திரு. கே.பி.பி. பாஸ்கர்
திருமதி ப. மனோன்மணி
திரு. செ. ராஜேஷ்குமார்

செயலகம்

திரு. க. பூபதி . . செயலாளர்

திரு. க.லோ. சிவகுமரன் . . துணைச் செயலாளர்

திரு. கு. பாலகிருஷ்ணன் . . குழு அலுவலர் (பொ.க.கு)

வருவாய் துறையினை "வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை" எனப் பெயர் மாற்றம் செய்வதற்கும் அம்மாற்றங்களை 2018–2019 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட வெளியீடுகளில் மேற்கொள்வதற்கும் ஒப்புதல் கோரும் நிதித் துறையின் கருத்துருவிற்கு மதிப்பீட்டுக் குழு ஒப்புதல் அளிக்க குழு கூடியது.

மேற்படி, மானியக் கோரிக்கையை பெயர் மாற்றம் செய்வதற்கு குழு தனது ஒப்புதல் அளித்தது.

விளம்பி சித்திரை 25, – திருவள்ளுவர் ஆண்டு 2049

2018 மே 8, செவ்வாய்க்கிழமை

2016–2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு 2018 ஆம் ஆண்டு மே திங்கள் 8 ஆம் நாள், செவ்வாய்க்கிழமை, முற்பகல் 11.15 மணியளவில், சென்னை – 600 002, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு வளாக உபவசதி கட்டடத்தில் உள்ள குழுக் கூட்ட அறை எண்.1–இல் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. பி.எம். நரசிம்மன்

உறுப்பினர்கள்

திரு. எஸ்.ஆர். இராஜா
திரு. இரா. குமரகுரு
திரு. அர. சக்கரபாணி
திரு. தங்கம் தென்னரசு
டாக்டர் V.P.B. பரமசிவம்
திரு. கே.பி.பி. பாஸ்கர்
திருமதி ப. மனோன்மணி

செயலகம்

திரு. கி. சீனிவாசன் . . செயலாளர்

திரு. க.லோ. சிவகுமரன் . . . துணைச் செயலாளர்

திரு. சு. பாலகிருஷ்ணன் . . குழு அலுவலர் (பொ.க.கு)

மதிப்பீட்டுக் குழு (2016–2018) இந்தியாவின் பிற மாநிலங்களில் ஆய்வுப் பயணம் மேற்கொள்வதற்காக சில மாநிலங்களை தேர்வு செய்து எந்தெந்த மாநிலங்களுக்கு ஆய்வுப் பயணம் மேற்கொள்ளலாம் என்பது குறித்து முடிவு செய்வதற்காக மதிப்பீட்டுக் குழு கூடியது.

மேற்படி, குழு பிற மாநிலங்களுக்கு ஆய்வுப் பயணம் மேற்கொள்வதற்கு குழு ஒப்புதல் அளித்தது.

விளம்பி, ஆனி 19, – திருவள்ளுவர் ஆண்டு 2049

2018 ஜூலை 2, திங்கட்கிழமை

2016–2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு 2018 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 2 ஆம் நாள், திங்கட்கிழமை, பிற்பகல் 5.00 மணியளவில், சென்னை – 600 009, தலைமைச் செயலகம், சட்டமன்றப் பேரவை வளாகத்தில் உள்ள குழுக்கூட்ட அறையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. பி.எம். நரசிம்மன்

உறுப்பினர்கள்

திரு. எஸ். ஆர். இராஜா
திரு. அர. சக்கரபாணி
திரு. S. செல்வமோகன்தாஸ் பாண்டியன்
திரு. ஏ.பி. நந்தகுமார்
டாக்டர் V.P.B. பரமசிவம்
திரு. கே.பி.பி. பாஸ்கர்
திருமதி ப. மனோன்மணி

செயலகம்

திரு. கி. சீனிவாசன் . . செயலாளர்

திரு. க.லோ. சிவகுமரன் . . துணைச் செயலாளர்

திரு. சு. பாலகிருஷ்ணன் . . குழு அலுவலர் (பொ.க.கு)

குழு, சென்னை – 600 009, தலைமைச் செயலகம், சட்டமன்றப் பேரவை வளாகத்தில் உள்ள குழுக்கூட்ட அறையில் கூடியது "பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து / மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள்" குறித்த மதிப்பீடு தொடர்பாக மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் அரசு முதன்மைச் செயலாளர், அரசு கூடுதல் செயலர், அரசு இணைச் செயலர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, ஆணையர், உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிருவாகம், மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகம், இயக்குநர், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்ககம், குழும இயக்குநர், தேசிய நலவாழ்வு குழுமம், திட்ட இயக்குநர், தமிழ்நாடு சுகாதாரத் திட்டம், தலைவர், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் மற்றும் துறைகளின் உயர் அதிகாரிகளுடன் குழு கலந்துரையாடியது.

விளம்பி, ஆனி 20, – திருவள்ளுவர் ஆண்டு 2049

2018 ஜூலை 4, புதன்கிழமை

2016–2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு 2018 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 4 ஆம் நாள், புதன்கிழமை, பிற்பகல் 3.00 மணியளவில், சென்னை – 600 009, தலைமைச் செயலகம், சட்டமன்றப் பேரவை வளாகத்தில் உள்ள குழுக்கூட்ட அறையில் கூடியது.

கூட்டத்திற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வருகை புரிந்தனர் : –

தலைவர்

திரு. பி.எம். நரசிம்மன்

உறுப்பினர்கள்

திரு. எஸ்.ஆர். இராஜா
திரு. அர. சக்கரபாணி
திரு. எஸ். சுதர்சனம்
திரு. S. செல்வமோகன்தாஸ் பாண்டியன்
திரு. தங்கம் தென்னரசு
திரு. ஏ.பி. நந்தகுமார்
டாக்டர் V.P.B. பரமசிவம்
திருமதி ப. மனோன்மணி
திரு. வி.வி. ராஜன் செல்லப்பா

செயலகம்

திரு. க.லோ. சிவகுமரன் . . துணைச் செயலாளர்

திரு. சு. பாலகிருஷ்ணன் . . குழு அலுவலர் (பொ.க.கு)

குழு, "பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து / மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள்" குறித்த வரைவு அறிக்கையை குழு ஆய்வுக்கு எடுத்துக் கொண்டது. வரைவு அறிக்கைக்கு குழு ஒப்புதல் அளித்தது. குழுவினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட அறிக்கையை குழுவின் சார்பில் கையொப்பமிட்டு பேரவைக்கு அளிக்க குழுத் தலைவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது.

பரிந்துரைகளின் சுருக்கம்

1. பல்வேறு நிலைகளில் உள்ள பணிகளை துறை குறித்த காலத்திற்குள் முடிப்பதற்கு அனைத்து நடவடிக்கையினையும் மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.4)

2. போரூர் மற்றும் செம்மஞ்சேரி நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் 100 படுக்கைகள் கொண்ட 24 மணிநேரமும் செயல்படும், நகர சமுதாய நலவாழ்வு மையத்திற்கு அயர்பணி முறையில் கூடுதலாக மருத்துவர்களை நியமிப்பதற்கு, குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.9)

3. அரசு முதன்மைச் செயலாளர் தெரிவித்தது போல் மேற்படி மருத்துவ மருத்துவமனையை விதிகளுக்குட்பட்டு அரசே ஏற்று நடத்த வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.12)

4. தாம்பரத்தில் செயல்படும் பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவமனையை அரசே ஏற்று நடத்த வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.16)

5. மேம்படுத்தப்பட்ட அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களில் மேம்படுத்தப்பட்டதற்கான அனைத்து வசதிகளையும், விரைந்து ஏற்படுத்தப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.19)

6. துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள் பல் மருத்துவர்களை நியமிப்பதற்கு துரிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.22)

7. குழு, திண்டுக்கல் மாவட்டம், பழநி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலின் அருகில் இந்து அறநிலையத் துறைக்கு சொந்தமான இடமிருப்பதால், அங்கு அரசின் சார்பில் உயர் சிகிச்சைப் பிரிவுகளை உள்ளடக்கிய மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அமைக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.24)

8. பழநி, கீரனூர் மற்றும் கள்ளிமந்தையத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவர்களை நியமிக்கக் குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.26)

9. துறை தெரிவித்தது போல் குறித்த காலத்திற்கு முன் தேவையான அனைத்து நடவடிக்கையினையும் மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.29)

10. மருத்துவமனைக்கு வருகை தரும் நோயாளிகள் நலன் கருதி மருத்துவமனையில் உள்ள மருத்துவர்களின் காலிப்பணியிடங்கள் நிரப்பிட வேண்டும் என்பதே குழுவின் கருத்தாகும். சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு துறையால் தெரிவிக்கப்பட்டது போல் துரித நடவடிக்கையினை மேற்கொண்டு மருத்துவர்கள் காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.32)

11. நுண்கதிர் வீச்சாளர் பதவியில் உள்ள காலிப்பணியிடங்களை ஒரு சிறப்பு நியமனம் (Special Drive) மூலம் நிரப்பத் துறை மருத்துவ பணிகள் தேர்வு வாரியத்தினை வலியுறுத்த வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.35)

12. மாதவரத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மகப்பேறு மருத்துவர் காலிப்பணியிடத்தினை நிரப்பவும் மோரைப் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கவும் குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.36)

13. வடமலாபுரம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் அமைக்கப்பெற வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.39)

14. திருவள்ளூர் மாவட்டத்தில், திருத்தணி திருக்கோயில் சார்பாக புதிய மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அமைக்க குழு அரசுக்கு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.42)

15. மக்களின் உயிர் காக்கும் நோக்கில் அரசு மருத்துவர்கள் அனைவருக்கும் விபத்து மற்றும் அவசர சிகிச்சை குறித்த 12 வார கால Online அல்லது நேரடி பயிற்சி கட்டாயமாக வழங்க குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.45)

16. உணவு கலப்படம் குறித்து புகார் செய்ய துறையால் தெரிவிக்கப்பட்டுள்ள தொலைபேசி எண்ணை பொது மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் உரிய விளம்பரம் செய்யப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.48)

17. சொந்த கட்டடம் கட்ட துறையால் நிர்ணயிக்கப்பட்டுள்ள எண்ணிக்கைக்கு உரிய நிதியினை பெற்று உடன் அது தொடர்பான நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.52)

18. பொது மக்கள் 104 மருத்துவ சேவை குறித்து முழு தகவலை அறியும் பொருட்டு இன்னும் கூடுதல் அளவு விளம்பரம் செய்யப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.56)

19. ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வருகை தரும் கர்ப்பிணிப் பெண்கள் அமரும் வகையில் போதுமான இருக்கை வசதியினை மருத்துவமனைகளில் செய்து தரவேண்டும் என்று துறைக்கு குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.59)

20. அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள 9 அரசு மருத்துவமனைகல் நீங்கலாக இதர மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளிலும் மேற்படி பிரிவின் அலகு (Unit) துவங்கப்பெற வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.62)

21. துறையால் தேர்வு செய்யப்படும் இடத்தில் Accident Trauma Care Centre மற்றும் Emergency Stabilization Centre ஆகியவை முறையே அமைக்கப்பெற வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.66)

22. குழு தமிழ்நாட்டில் செயல்படும் வட்டம் சார்ந்த அரசு மருத்துவமனைகளில் படிப்படியாக (Phased Manner) சி.டி.ஸ்கேன் இயந்திரம் நிறுவப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.69)

23. குழுவிடம் கோரிக்கை வைக்கப்பட்ட காரணத்தால் துறை இது குறித்து உரிய நடவடிக்கையினை மேற்கொண்டு, தாய்–சேய் நல மையத்தை மேம்படுத்த உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.71)

24. குழுவிடம் கோரிக்கையாக வைக்கப்பெற்ற நரிக்குடி, திருச்சுழி, காரியாப்பட்டி, அருப்புக்கோட்டை, சாத்தூர், விருதுநகர் ஆகிய அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை Universal Health Coverage Project மூலம் மேம்படுத்தத் துறை உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.75)

25. அதிக நோய் தாக்கமுள்ள 87 வட்டாரங்களில் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களை கண்டறிந்து உரிய சிகிச்சையினை விரைந்து அளித்து அவர்களின் நோயின் தாக்கத்திலிருந்து விடுபட துறை துரித நடவடிக்கையினை மேற்கொள்ள குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண்.80)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம்

23.3.2017	துவக்கக் கூட்டம்
26.4.2017	நீலகிரி
27.4.2017	நீலகிரி
28.4.2017	நீலகிரி
23.5.2017	தேனி
24.5.2017	திண்டுக்கல்
25.5.2017	திண்டுக்கல்
7.7.2017	சென்னை
8.8.2017	தூத்துக்குடி
9.8.2017	திருநெல்வேலி
21.11.2017	திருவள்ளூர்
22.11.2017	காஞ்சிபுரம்
8.2.2018	விருதுநகர்
9.2.2018	மதுரை
20.2.2018	சென்னை
8.5.2018	சென்னை
2.7.2018	சென்னை
4.7.2018	சென்னை